1st March 1954]

THE HON. SRI C. SUBRAMANIAM :—" I cannot at present give the exact figures. But I may assure the hon. Member that we have considerable stock on hand in Malabar."

SRI P. K. GOPALAKRISHNAN :—" Is it not a fact that the offtake of rice has become less in Malabar because the rice supplied there is unwholesome and un-eatable? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" The normal offtake is being maintained, Sir. If I can give comparative figures, the offtake of rice per week from fair price shops for the City and the rest of the Madras State excluding Malabar is 1,900 tons whereas in Malabar the offtake has been 2,408 tons. I do not think it could therefore be said that the offtake had gone down."

SRI R. KRISHNAN —" ഫിബ്രുവരി മാസത്തിൽ കോഴിക്കോട്ടെ പി. സി. സി. സൊസൈററിക്ക കൊടുത്ത അരിയെപ്പററിയാണ് ഞാൻ പറഞ്ഞതു്. "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" I do not know with reference to which period the hon. Member is putting his question. Is it with reference to the stock held in November or our present stock? "

SRI P. K. GOPALAKRISHNAN :—" Sir, I was saying that the offtake of rice had gone down in Malabar, when compared to last year's offtake. I did not say that the offtake of rice had become less when compared to the offtake in the rest of Madras State."

THE HON. SRI C. SUBRAMANIAM :—" I may tell the hon. Member that the offtake had not gone down appreciably to any extent, when compared to last year's offtake."

SRI R. KRISHNAN :—" கனம் மந்திரி அவர்கள் 'மலபாரில் ஸ்டாக்கிலிருந்த அரிசி எவ்வளவு? சென்ற முறை நாங்கள் இந்தச் சட்டசபையில் சொன்னபடி கெட்டுப்போன தாடப்பள்ளிக்கூடம் அரிசியை எடுத்துப்போய் விட்டார்களா? அந்த அரிசியே இன்னும் அங்கு தரப்பட்டு வருகிறதா?' என்று சொல்வார்களா? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" As soon as these complaints are received, they are investigated and then whatever action is necessary, is being taken."

MR. SPEAKER :—" Questions over. The general discussion on the Budget may now begin. Mr. Kalyanasundaram may now speak."

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—POINT OF ORDER *RE* HUNGER STRIKE OF STUDENTS OF THAKKAR BABA VIDYALAYA, TYAGARAYANAGAR.

SRI A. RATNAM :—" On a point of order, Sir, கனம் சபா நாயகர் அவர்களே, இந்தச் சபை முன்பு கனம் அங்கத்தினர்கள் அடிக்கடி கொண்டுவரும் அவசரப் பிரேரணைகளை சர்க்கார் சரியான முறையில் பரிசீலனை செய்யாததின் காரணமாக இந்த நகரத்தில் பொது மக்களின் சுகாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. சென்ற வெள்ளிக்கிழமை

நானும், எனது நண்பர் ஸ்ரீ கோவிந்தசாமி அவர்களும் கொண்டு வந்த ஒத்திவைப்புப் பிரேரணையை தாங்கள் நிராகரித்து விட்டீர்கள். ஆனால் தோழர் கல்யாணசுந்தரம் கொண்டு வந்த தக்கர் பாபா வித்யாலயம் சம்பந்தப்பட்ட ஒத்திவைப்புப் பிரேரணையை தாங்கள் அனுமதித்துப் பேசச்சொன்னபோது, ஹரிஜன மந்திரி அவர்கள் அதற்குச் சரியான பதிலை திங்கட்கிழமை சொல்வதாக அன்று சொல்லி விட்டார்கள். ஆனால் இன்று இன்னும் அதைப்பற்றிய விஷரம் கூறப் படவில்லை.''

MR. SPEAKER :—'' I will ask the Hon. Minister to reply. I remember the Hon. Minister for Harijan Welfare told the House the other day that he would answer that question or make a statement to-day. I am glad that Mr. Ratnam had reminded me of it now. Is the Hon. Minister prepared to reply now? ''

THE HON. SRI V. C. PALANISWAMI GOUNDER :—'' Sir, I had gone into the question. I am not in a position to answer in all its details now. I had asked the concerned authorities to institute an enquiry and submit a report. The report is awaited. I think I may receive it in the course of the day. Therefore I submit to you, Mr. Speaker, that I will be able to give a proper reply to-morrow.''

SRI A. RATNAM :—'' நான் எழுப்பிய ஒழுங்குப் பிரச்னை மிகவும் முக்கியமானது. சுமார் 144 ஹரிஜன மாணவர்கள் வெளியேற்றப் பட்டிருக்கிறார்கள். அவர்களில் இரண்டு பேர்கள் கொள்ளை நோயால் பாதிக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் அட்மிட் செய்யப்பட்டிருக்கிறார்கள். மற்ற ஹரிஜன மாணவர்கள் உண்ண உணவு இன்றி தெருவில் திரிந்து கொண்டிருக்கிறார்கள்.''

MR. SPEAKER :—'' கனம் மந்திரி அவர்கள் நாளை அதற்குப் பதில் சொல்லுகிறேன் என்று சொல்லி இருக்கிறார். பட்ஜட் டிபேட் வரப்போகிறது. நீங்கள் வேண்டுமானால் பட்ஜெட் விவாதத்தில் இதைப் பற்றி பேசலாம். அதற்கு நான் உங்களை அனுமதிக்கிறேன்.''

III.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR THE YEAR 1954–55.

11-45 a.m. * SRI M. KALYANASUNDARAM:—'' கனம் சபாநாயகர் அவர்களே இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை இந்தச் சபையின் முன்பு சமர்ப்பித்து கனம் நிதி மந்திரி அவர்கள் நிகழ்த்திய பிரசங்கத்திற்காக நான் அவரைப் பாராட்டுகிறேன். 'நம்முடைய நாட்டிலுள்ள ஜனங்களுடைய குறைகள் என்ன? தேவைகள் என்ன?' என அறிந்து அவற்றைப் போக்குவதற்கும், அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் புதிய திட்டங்களைக் கண்டு பிடித்து அவற்றை பட்ஜெட்டில் சேர்த்திருப்பதாக நினைத்து அல்ல. அவ்விதம் இல்லாமல் அவர் தன்னுடைய பிரசங்கத்தை வெகு தந்திரமாக நிகழ்த்தி இருக்கிறார். இந்த இரண்டு வருஷத்தில் இவ்விதமான பிரசங்கத்தை நிகழ்த்தவாவது பழகிக்கொண்டிருக்கிறாரே என்பதற்காக அவரை நான் பாராட்டுகிறேன்.

'' அவருடைய பிரசங்கத்தில் முக்கியமான அம்சங்கள் என்னென்ன கண்டிருக்கிறது என்பதை முதலில் சொல்லலாம். நம்முடைய ராஜ்யத்திலுள்ள பொருளாதார நிலைமையைப் பற்றி அவர் ஆராய்ந்திருக்கிறார். பிறகு தொழில், விவசாயம் அவற்றினுடைய நிலைமை என்ன என்பதையும் அவர் தெளிவுபடுத்தி இருக்கிறார். ஐந்தாண்டு திட்டத்திலுள்ள, பலதிட்டங்கள் நிறைவேற்றப்படாமல் பாக்கி இருக்கின்றன என்பதற்கான